
# வீட்டுத் தெய்வம்
# ஊட்டும் தாய்.



*இயற்றியவர்;*
**மா. சொ. ஜெம்புலிங்கம்,**
**வீராணி, (லால்குடி தாலுகா)**
*(திருச்சிராப்பள்ளி ஜில்லா)*

முதற்பதிப்பு டிசம்பர் 53
இரண்டாம்பதிப்பு ஜூலை 1955 4000 பிரதிகள்

பதிப்புரிமை ஆக்கியோனுக்குரியது

இயற்றிப் பிரசுரித்தவர் விலாசம்:
மா. சொ. ஜெம்புலிங்கம்
5 வீதி சந்தி, புப்புருவ

விலை சதம் 25] [20-7-55

# கர்த்தன் கட்டளை

முன் கொடுத்துப் பின்னுண்டாள்
முன்னூறு நாள் சுமந்தாள்
பின்னுண்டு முன் கொடுப்பேன்
பெற்று என்னை வளர்த்த தாய்க்கு

முன் கண்ட தெய்வம் முன்னின்றுபேசும்
பின் கண்ட தெய்வம் பேசாது—கண்கண்ட
தாயை வணங்கினால் தரணியில் நாம்செய்த
பாவம் நீங்கிப் பலன் தரும்,

வீட்டுத் தெய்வம் ஊட்டும் தாய்க்கு முன் கொடுத்துப் பின் உண்பது என்ற நோன்பு இருந்து, அன்றைய தினம் விதவைத் தாய்மார்களுக்குஉணவு அல்லது உணவுஉடைகொடுத்து அவர்கள் மனம் மகிழும்படி உபசரித்தால்நலம் பெறலாம் என்பது கர்த்தன் கட்டளை.



# விராணிப் பெருமை.

சொக்க லிங்கம் மூத்தமகன்
சொல்கின்றேன் ஊர்பெருமை—என்றும்
விக்கினங்கள் நேராமல்
விநாயகரே துணை செய்வீர்

வீராணிப் பெருமையைச் சொல்வேனு
வீற்றிருக்கும் தேவியின் மகிமையைச் சொல்வேனு

கோவிலின் பெருமையைச் சொல்வேனு
குடிகொண்ட தெய்வங்கள் மகிமையைச் சொல்வேனு

ஐயனுர் வலுமையைச் சொல்வேனு
ஆனைமுகன் மகிமையைச் சொல்வேனு

வீரபத்திரர் வலுமையைச் சொல்வேனு
வீதியின் பெருமையைச் சொல்வேனு

கருப்பண்ணர் வலிமையைச் சொல்வேனு
காக்கும் தெய்வங்கள் மகிமையைச் சொல்வேனு—என்

தாயின் பெருமையைச் சொல்வேனு
தனயனை வளர்த்த நேர்த்தியை—இந்த

சேதியை யாரிடம் சொல்லுவேன்—நான்
ஜெம்புலிங்கம் மனதில் உள்ளதை.

## ஜீவன் முக்தி

சிற்றூர் என்று எண்ணவேண்டாம் மனமே—இது
ஜீவன் முக்திக்கு வழிதரும் நகரே

பற்று வைத்து இவ்வூரில்—தினம்
பற்பல நன்மைகள் செய்திடுவாய்

பாட்டி பால் ஊட்டியும் வாழ்ந்த—பெரிய
பட்டணம் இதுவென் றெண்ணு

பாட்டன் தகப்பன் பிறந்த—இது
பாரினில் புகழ் பெறும் நாடு

இப்புனித பூமியில் பிறந்ததும்—நான்
பூர்வ புண்ணியம் செய்ததின் பலனே.

## மூன்று தாய்கள்

[1] மும் மூர்த்திகளுக் கடங்கிய இவ்வுலகில்
மூன்று தாய்கள்உண்டெ னக்கு
கையுண வுஊட்டிய பெற்ற தாய்
கண்ணீர் துடைத்த மற்ற தாய்
காப்பாற்றி வரும் உற்றதாய்

[2] பெற்ற தாய் உடன் மற்ற தாய் உண்டு
உற்றதாய் ஒருத்தியே—மற்றும்
எத்தனையோ தாய்மார்கள் எனக்குண்டு
பத்மினி சாதிப் பெண்கள்

[3] பெற்ற தகப்பன் இல்லை மற்றதகப்பன் உண்டு
உற்ற தகப்பன் ஒருவரே—மற்றும்
எத்தனையோ தகப்பன்மார்கள் எனக்குண்டு
உத்தம சாதி மான்கள்

# கண்கண்ட தெய்வம்

வாட்டங் கொள்ளாதே அம்மா—உன்னைக்
காட்டிக் கொடுக்காமல் காத்திடுவேன்

பாட்டுகள் உன்பேரில் பாடிடுவேன்—உன்
பாதங்களைத் தொட்டு வணங்கிடுவேன்

பாட்டன் பாட்டிக்கு நீ செய்த
பணிவிடை என்றும் வீண் போகாதே

காட்டுக்குப் போய் தவம் செய்யணுமா—என்
கண்கண்ட தெய்வம் நீ வீட்டில் இருக்கையில்

ஓட்டுக்குப் பிச்சை கிடைத்திடுமே — உலகில்
உண்மைக்கு புகழ் எங்கும் ஓங்கிடுமே

# மனிதனுக்கினள்

(1) என் சுகத்திற்காக இவ்வுலகில் வாழ்ந்து
தன் சுகம் மறந்து தரணியில் மனிதனுக்கிப்
பெண் சுகம் தேடி வைத்தாய் நான் பேரின்பம் அடைவதற்கு
உன் சுகமே உயர்ந்தவழி.

# கொடி ஏற்றுவேன்

(2) தகப்பன் இல்லை தாயே நான் உனக்கு
தொங்கல் வரை சோறு உடை வீடு கொடுத்து
பங்கம் வராமல் பாது காவல் புரிந்து
எங்கும் உனைப் புகழ கொடி ஏற்றிடுவேன்.

# என் தாயார்
## மா. சொ. சின்னம்மாள் அவர்கள்
## மறைவு
## 11-5-53

நினைத்தால் நெஞ்சம் நடுங்குதே

அணைத்து என்னை வளர்த்து ஆதரித்து வந்த
அன்னை இவ்வுலகை விட்டு மறைந்ததை—நி

களைத்து வீடுவந்தால் காடிநீர் கொடுத்து
இளைத்த மேனிக்கு எண்ணை யிட்டுத் தேய்த்தாள்—நி

படித்து வருவதற்கு பள்ளிக்கூடம் அனுப்ப
உடுத்திப் பிடவை உணவு கைக்கொடுத்தாள்—நி

தடுத்துப் பேசினாலும் சாமி என்கண்ணே என்று
கடுத்த வார்த்தையைக் கையாளாமல் இருந்தாள்—நி

தொடுத்திடும் அம்பைத் தன் தோளில் ஏற்று
வடித்துக் கண்ணீர் வாரி அணைத்தாள்—நி

# பேரனைக் கண்டாள்

ஊட்டி வளர்த்த தாயைப்
போற்றி வணங்குவேனே.

[1] பத்துமாதம் சுமந்துப் பெற்றெடுத்தாள்—முலைப்
பால்கொடுத்து என்னை வளர்த்துவிட்டாள்—தன்
தோள்கடுக்கத் தூக்கிச் சுமந்திட்டாள்—ஈ
எறும்பு அணுகாமல் காத்திட்டாள்.

[2] நோயை விலக்க மருந்தும் ஊற்றினாள்—கோரைப்
பாயில் கிடத்தி பக்கம் படுத்திட்டாள்—தன்
சேயின் நினைவால்தூக்கம் துறந்திட்டாள்-தனக்கு
எதுவும் விருப்பின்றி உடல் இளைத்து வாடினாள்.

[3] தொட்டிலில்விட்டென்னை ஆட்டினாள்-அன்பாய்
கட்டி அணைத்துப் பாடினாள்—முதுகைத்
தட்டிக் கொடுத்தும் ஆடினாள்—என்
சுட்டித் தனத்தை மாற்றினாள்.

[4] அள்ளி உணவை ஊட்டினாள்—உள்ளூர்ப்
பள்ளியில் சேர்த்துப் படிப்பித்தாள்—நான்
துள்ளி விளையாட களித்திட்டாள்—துஷ்டப்
பிள்ளைகள் நேசத்தைக் கடிந்திட்டாள்

[5] கற்றதைக் கேட்டு மகிழ்ந்திட்டாள்—நல்ல
சுற்றத்தார்நேசத்தை விரும்பிட்டாள்—யாருடனும்
பற்றுடன் இருக்கப் பழக்கிட்டாள்—என்றும்
வற்றாத அன்புடன் வாழ்ந்திட்டாள்.

[6] வாழ்க்கைத் துணைவியைத் தேடிவைத்தாள்—பின்
வார்சு இல்லை என்று வருந்தலுற்றாள் — என்
பாபம் நீங்க பக்ஷம் வைத்தாள்—தன்
தாபந் தீரப் பேரனைக் கண்டாள் [ஊட்டி]

# பழுத்த பழம்

## வயது சென்ற விதவைத் தாய்மார்களின் துயர்நீங்க காக்கும் தாயிடம் முறையிடல்

[1] பழுத்த பழமாச்சு பார்ப்போர்க் கெளிதாச்சு
அலுத்து சலித்து போச்சே—என் கண்ணம்மா
யாரிடம் சொல்வே னிதை

[2] யங்கைப் பருவம்போச்சு மனமும் வருந்தலாச்சு
அங்கம்தளர்ந்து போச்சே—என் கண்ணம்மா
அழகும் குறைந்ததடி

[3] இடுப்பு வளைந்து போச்சு ஏங்கி முகம்வாடலாச்சு
உடுப்பும் குறையலாச்சே—என் கண்ணம்மா
உணவும் வெறுக்குதடி

[4] பிள்ளைகள் அடிக்கலாச்சுபேரன்மார்உதைக்கலாச்சு
உள்ளம் உறுக லாச்சே—என் கண்ணம்மா
உண்மை அறிவாய் தாயே

## தாய்க்குப் பணி செய்

தாய்ப்பணி செய்ய தனயன் முன் வந்தால்
நோய்ச்சனி நீங்கிடும்—நொடியில்
பேய்ப்பிணி பெரும்பிணி பேசாப் பிணியும்
பாச மின்றிப் பறந்திடும்

## தாயைவிடப் பணம் பெரிதல்ல

### பல்லவி

தாயைக் கொண்டாடுவேன்—பெற்ற
தாயைக் கொண்டாடுவேன்

### அநுபல்லவி

துணையிருந்து சோறூட்டின மாதா
வினை அகற்றிடும் வீட்டுத் தெய்வம்—தா
சினம் இன்றிச் சிந்தை மகிழ்வுடன்
தினம் தினமென்னைச் சீராட்டி வளர்த்த—தா
குணம் உள்ளவள் கும்பிடத் தகுந்தவள்
பணம் பெரிதோ பாரினில் தாயைவிட—தா

## அன்னம் ஆடை வீடு

சீற்றங் கொள்ளாதே—மனமே
தாயைத் தேம்பவைக்காதே—அவள்
தோற்றம் தெரியாமல்—மனமே
துன்பம் அடையாதே

1 தாரத்தின் சொல் கேட்டு
தாயை இம்சிக்காதே
வாரத்திற் கொருமுறை
வம்புக்குப் போகாதே
சாபம் பொல்லாது அது சர்ப்பவிஷமாகும்

2 தாண்டிக் குதித்துத்
தடியெடுக்காதே
ஏண்டிபோடி என்று
இடும்பு பேசாதே
இளப்பமாய் எண்ணுதே அவள் ஈஸ்பரிக்குச் சமமே

3 அடாது செய்து
அதட்டிப் பேசாதே
அயலார் சொல்கேட்டு
அவமானம் செய்யாதே
அழுதால் தோஷமே அது அக்கினிபோலெரிக்குமே

4 கடுத்த வார்த்தையை
கையாளாதே
கண்ணை உருட்டி
காலை தூக்காதே
தன்னலம் பாராதே தாயை தயங்கவிடாதே

5 அன்னம் ஆடை வீடு கொடுத்து
ஆதரித்துக்கொள்
வின்னங்கள் பேசி
விலகி நிற்காதே
வினை வந்தணுகும் அதை வெல்வதும் கடிது

6 தாழ்ந்த வயசில்
தடி ஊன்றும்போது
வீழ்ந்துபோகநீ
வீதியில் விடாதே
வேற்றுமை எண்ணுதே விதி நம்மை விடாதே
7 பெற்று வளர்த்து
பெயர் வைத்தழைத்தவள்
கை உணவு ஊட்டி
கடும் பசி தணித்தவள்
கண் கலங்கினுல் அது கத்திபோலறுக்குமே

## கருணை உள்ள தெய்வம்

தாயைப்போல் கருணை உள்ள தெய்வம்
தரணியில் வேறுண்டோ

பெற்றுவளர்த்த தெய்வம் பெயர் வைத்தழைத்த தெய்வம்
உற்றது சொல்லும் தெய்வம் உறக்கமின்றி பார்த்த
தெய்வம்—தா

முத்தங்கொடுத்த தெய்வம் முன்னின்று பேசும் தெய்வம்
சித்தம் தேற்றிய தெய்வம் சினங்கொள்ளாததெய்வம்—தா

அடக்கமாய் வாழும் தெய்வம்அண்டையிலுள்ளதெய்வம்
சடுத்தம் பேசாத தெய்வம் சற்குணமுள்ள தெய்வம்—தா

கற்றதைசொல்லும் தெய்வம் காடிநீர்கொடுத்த தெய்வம்
பற்றுடனிருக்கும் தெய்வம் பால் கொடுத்த வீட்டுத்
தெய்வம்—தா

## கண் குடிசை

உண்ண உணவின்றி உருக்குலைந்து முகம்வாடி
கண்ணீர் விடும் தாயின் கவலை தீர்வ தெக்காலம்
ஒட்டுப் புடவைகட்டி உடலுக்கும் போதாமல்
பட்டுப் புடவைகட்டி தாயைப்பார்ப்பதும் எக்காலம்
மண் குடிசையிலிருக்க மழைவெயில் உள்ளேவிழும்
கண் குடிசைப் போல் தாயைக் காப்பது எக்காலம்

## இன் சொல்

அமுதால் பால் கொடுக்கும் அன்னை என்ற தெய்வம்
எழுதியும் காட்டும் ஏட்டில்—இன்சொல்லால்
பேசப் பழக்கும் பிசகினாலும் பிள்ளை என்ற
பாசம் மிகுதியால் பல் காட்டும்

## எமதர்மர்

[1] கரந்தபாலைக் குடிப்பதற்குள்
கண்கள் இரண்டும் மூடிடும்
மறைந்தவர்கள் போல் நாமும்
மாள்வ தோர் நாள் நிச்சயம்

[2] பறந்து வந்து எமன் பிடிக்க
பற்கள் எல்லாம் கிட்டிடும்
தெரிந்தவர்கள் வருவதற்குள்
ஜீவன் விலகிப் போய் விடும்

[3] வீசும் கயிறுமேல் விழுந்தால்
விளக்கிரண்டும் அவிழ்ந்திடும்
ஆசைப் பெண்டீர் அனைவரும்
அருகே விட்டுப் போவரே

[4] நன்மை தின்மை இரண்டுக்கும்
நாமே வகைசொல்லணும்
தின்மை நீக்கி நன்மைசெய்தால்
செய்த பலன் கிட்டிடும்

## ஒரு சாண் துணி

தாண்டித் தாண்டிக் குதித்தாலும்—ஒரு
சாண் துணியும் உடன் வராதே—முன்
பாண்டியன் ஆண்ட தேசமெல்லாம்
பலபேர் ஆண்டு மறைந்தனரே

## ஒரு கரண்டிப் பால்

வேண்டி வேண்டி வைத்தாலும்--உடல்
வேகும்போது உடன் வராதே—ஒரு
கரண்டிப்பாலும் உள்ளே புகாமல்
கடவாய் வழியாய் வழிந்திடுமே

## வற்றும் காதல்

தேடும் பொருள் பெண்டீர் பிள்ளை
கூட வந்து சேருமா
ஆடும் பொம்மலாட்டத்திற்கு
ஆசை வைத்துழல் வானேன்

பெற்ற தாயும் சுற்றத்தாரும்
பற்று வைத்து வருவாரோ
கற்ற கல்வியும் கருத்தழிந்தால்
கனங் குறைந்து போகுமே

உற்றத் தாரும் பெற்ற தகப்பனும்
ஓடி வந்து சேர்வரோ
வற்றும் காதல் உள்ளவரைத்
தொற்றிக் கொண்டிருப்பா னேன்.

---

# முடிப்பாய் கட்டி திரும்பிடும்

எக்கம் கொள்ளாதே மனமே
இதற்கு இரங்கித் தவிக்காதே

பெண்டு பிள்ளை கன்று மாடு
பெற்றதாய் சுற்றத்தார்கள்
அண்டை வீட்டார் அண்ணன் தம்பி
யாரும் கூட வருவதில்லை —ஏக்கம்

மாட மாளிகை கூட கோபுரம்
மற்றும் உள்ள சேனைதலம்
ஆடும் ஊஞ்சல் அழகிடும் பொருள்கள்
மாண்டவுடன் வருவதில்லை —ஏக்கம்

வீடு காடு வேறெதும் சொத்துக்கள்
ஓடும்வண்டி ஹோரன் உள்ள மோட்டார்
பாடும் றேடியோ பவுண்டன் பேனா
பற்று வைத்து வருவதில்லை —ஏக்கம்

பட்டுப் புடவை பஞ்சு மெத்தை
பாக்கியுள்ள ஸ்பிரிங் கட்டில்
விட்டுப்போன மண்ணோடும்
வீட்டை விட்டு வருவதில்லை —ஏக்கம்

கற்ற கல்வியும் கைப்பணமும்
கால் செருப்பும் கைக்குடையும்
வட்டுத் துணியும் வாங்கின பண்டமும்
வருவதில்லை நம்முடனே —ஏக்கம்

காதுக் கடுக்கன் கைச் சங்கிலி
கழுத்து நகை கால்க் காப்பு
இடுப்பு அரை ஞாண் எல்லா நகையும்
முடிப்பாய்க்கட்டி திரும்பிடுமே —ஏக்கம்

---

## என் தந்தை
# மா. சொக்கலிங்கம்பிள்ளை
## அவர்கள் மறைவு

பாலர் களையும் பால் குடிக்கும் சிசுவுடனும்
பாட்டனுடன் அன்னை பதமறியா மக்களையும்
உற்றூர் சிற்றப்பார் ஊரார்கள் முன்னிலையில்
பற்று விட்டு ஏகி விட்டார் பலபேரும் கண் கலங்க

### என் பாட்டனார்

# க. மாரியாபிள்ளை அவர்கள்

### மறைவு

ஆற்றல் அறிவுடன் அமைதி உள்ளவர்
ஏற்றம் பிடித்தறியார் இந்தியாவில்—இலங்கையில்
வியாபாரம் செய்து வீடு காடு தேடி வைத்து
விண்ணுலகடைந்த பாட்டன் மாரியாபிள்ளை

---

### என் தமக்கை

# முத்து கண்ணம்மாள் அவர்கள்

### மறைவு

தம்பி என்றன்புடன் அழைக்கும் தமக்கை
தன் மைந்தன் ஒருவனையும்—நம்பியிருந்த
கணவனையும் கலங்க வைத்து கண்போல் நினைத்த
அன்னையையும் அழ வைத்தகன்று விட்டாள்

# உண்மைக்கு வெற்றி

இங்கும் வெற்றி அங்கும் வெற்றி
எங்கும் வெற்றியே
ஏங்கி வாடின தாய் தந்தை
இன்ப வெற்றியே.

சங்கு வெற்றித் தாளம் வெற்றி
மேளம் வெற்றியே
சலித்தலுத்த தாய் தந்தை
தளிர்த்த வெற்றியே

உற்ற தாய்வெற்றி பெற்ற தாய் வெற்றி
மற்ற தாய் வெற்றியே
உண்மையான பக்தருக்கு
உலகெங்கும் வெற்றியே

வெற்றி வெற்றி வெற்றி வெற்றி
வெற்றி வெற்றியே
வீற்றிருக்கும் காக்கும் தாய்
நகரில் வெற்றியே.



குறிப்பு: — என் தாயார் இவ்வுலகில் இருந்தபொழுது இயற்றிய பாட்டுகளும் இதில் உண்டு

# முக்கிய கவனிப்பு

அன்புடையீர்!

இப்புத்தகத்தின் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தை வீட்டுத் தெய்வத்திற்கு மண்டபம் கட்டவும் அம் மண்டபத்தில் வைத்து விதவைத் தாய்மார்களுக்கு முன் கொடுத்துப் பின் உண்பது என்ற விழா நடத்தவும் உபயோகிக்கப்படும் ஆகையால் இதை வாங்கும் அன்பர்கள் ஒரு சிறந்த தர்மத்திற்கு கொடுத்துதவிய பலன் அடைவார்கள்.

வணக்கம்

மா. சொ. ஜெம்புலிங்கம்

Saravana Press, Nawalapitiya 20-7-55